


இந்தத் தொடரில் அல் காயிதா காண்டத்தின் கடைசிப் பகுதிக்கு இப்போது வந்திருக்கிறோம். விட்டால் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை ஒசாமா பின்லேடனே எடுத்துக்கொண்டுவிடுவார். மற்றவர்களும் பாவம் அல்லவா? எனவே, அல் காயிதாவின் அதிபயங்கரத் தாக்குதல் நடவடிக்கை என்று இன்றுவரை பிரமிப்புடன் வருணிக்கப்படும் செப்டெம்பர் 11, 2001 அமெரிக்க வர்த்தக மையத் தகர்ப்பு நடவடிக்கையை மட்டும் சற்று விரிவாகப் பார்த்துவிட்டு அடுத்த பரமாத்மாவை தரிசிக்கப் போய்விடலாம்.

முதல் வரியில் சொல்லிவிட வேண்டிய விஷயம், விமானங்களைக் கடத்தி ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்கிற திட்டம், ஒசாமா பின்லேடனுடையது அல்ல. அதன் காப்பிரைட் ஹோல்டர், நாம் முன்பே சில இடங்களில் தரிசித்த காலீத் ஷேக் முஹம்மது.

சூடானில் குடித்தனம் நடத்திக்கொண்டிருந்த காலத்தில், ஒசாமா பின்லேடனும் ஐமன் அல் ஜவாஹிரியும் இன்னும் சில மூத்த அல் காயிதா கமாண்டர்களும் சில விமானக் கடத்தல் திட்டங்களை யோசித்திருக்கிறார்கள். கடத்தி மோதுவது குறித்தல்ல. வெறுமனே கடத்தி வைத்து ஆட்டம் காட்டுகிற திட்டங்கள்.

ஆனால், ஒவ்வொருமுறை இது குறித்து விவாதிக்கும்போதும் விமானக் கடத்தல் என்பது அல் காயிதாவின் ப்ரொஃபைலுக்குப் பொருந்தாது என்கிற முடிவுக்கே அவர்கள் வர நேர்ந்திருக்கிறது. இதற்கான காரணங்கள் இவை:

அல் காயிதாவின் நோக்கத்துக்கு விமானக்கடத்தல் பொருத்தமானதல்ல.

சிறைகளில் உள்ள சக போராளிகளை விடுவிப்பதற்காக, விமானப் பயணிகளைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துவைக்கலாமே தவிர, பெருமளவில் அமெரிக்கர்களைக் கொலை செய்ய இத்திட்டம் உதவாது.

அப்படியே அல் காயிதாவின் பல போராளிகளை விடுவிக்க, கடத்தல் நடவடிக்கைகள் உதவக்கூடும் என்று எடுத்துக்கொண்டால்கூட, திட்டம் மிகச் சிக்கலானது. ஏனெனில், விமானத்தைக் கடத்திப்போய் பாதுகாப்பாக இறக்கி வைக்குமளவுக்கு, அல் காயிதாவுக்குச் சிநேகமான தேசம் என்று எதுவும் இல்லை.

இதனைக் காட்டிலும் பயணிகள் விமானத்தில் வெடிகுண்டு வைப்பது நல்ல பலன் தரக்கூடியது. மொத்தமாகப் பலரைப் படுகொலை செய்ய இது உதவும்.

மேற்படி நான்கு அம்சத் தீர்மானத்தின் இறுதி வரியை ஒட்டித்தான், கிழக்காசிய நாடுகளிலிருந்து புறப்படும் அமெரிக்க விமானங்களில் குண்டுவைக்கலாம் என்று அல் காயிதா முடிவு செய்திருக்கக் கூடும். ரம்ஸி யூசுஃபுக்கு உதவி செய்ய முன்வந்ததற்கும் இதுவே காரணமாக இருந்திருக்கலாம். நல்லவேளையாக அத்திட்டம் நடைபெறவில்லை என்பதால், மிகப்பெரிய அழிவுகளிலிருந்து அமெரிக்கா தப்பித்துவிட்டது.

ஆனால், விமானம் என்கிற வஸ்துவைப் பயன்படுத்தி ஏதாவது செய்யவேண்டும் என்கிற யோசனை மட்டும், அல் காயிதாவின் அடிமனத்தில் அப்படியேதான் இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் காலீத் ஷேக் முஹம்மது, ஒசாமாவைச் சந்திக்க ஆப்கனிஸ்தான் வந்தார்.

காலீத் ஷேக்கின் திட்டம், ஒசாமாவால் எடிட் செய்யப்படுவதற்கு முன்னால் இருந்த வடிவம் இது:

மொத்தமாகப் பத்துப் பயணிகள் விமானங்களைக் கடத்துவது. வர்த்தக மையக் கட்டடங்கள், பெண்டகன், வெள்ளை மாளிகை, சி.ஐ.ஏ. மற்றும் எஃப்.பி.ஐ.யின் தலைமை அலுவலகங்கள், ஒருசில அணுசக்தி நிலையங்கள் தவிர, கலிபோர்னியாவில் உள்ள சில மிக உயரமான கட்டடங்களை இந்த விமானங்களில் ஒன்பதை மோதி அழித்துவிடுவது.

அந்தப் பத்தாவது விமானம் எதன்மீதும் மோதாது. மாறாக, அந்த விமானத்தில் ஏகப்பட்ட ஆயுதங்களுடனும் வெடிமருந்துகளுடனும் காலீத் ஷேக் முஹம்மதுவே ஏறுவார். விமானத்தில் உள்ள அத்தனை பேரையும் அவர் ஒருத்தரே கொன்று வீசிவிட்டு ஒரு சொற்பொழிவாற்றுவார். அந்தச் சொற்பொழிவு, சர்வதேச மீடியா முழுவதற்கும் போய்ச் சேரும்படி ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இஸ்ரேல் மற்றும் பிலிப்பைன்ஸ் அரசுகளுக்கு அமெரிக்க அரசு தரும் ஆதரவைக் கண்டித்தும், மத்தியக் கிழக்கிலிருந்து அமெரிக்கா முற்றிலுமாகத் தனது படைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் அந்தச் சொற்பொழிவு அமையும்.

மேற்படி சொற்பொழிவை முடித்துவிட்டு, ஒருவேளை தப்பிக்க முடியுமானால் தான் தப்பிப்பது. இல்லாவிட்டால், தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளவும் தயார் என்பதுதான் அவரது திட்டம்.

காலீத் ஷேக் இத்திட்டத்தை விவரிக்கும்போதே பின்லேடன் இதனை எடிட் செய்துவிட்டார். பத்து விமானங்களைக் கடத்துவது, இறுதிப் பேருரை நிகழ்த்துவது எல்லாம் ரொம்ப ஜாஸ்தி என்பது அவரது கருத்து. விமானங்களை மோதி இலக்குகளை அழிப்பது என்பது உருப்படியான யோசனை. அதோடு நிறுத்திக்கொள் என்று சொல்லிவிட்டு, அமெரிக்கத் தாக்குதலுக்கு அவரே திட்டம் தீட்ட ஆரம்பித்தார்.

நான்கு விமானங்களைக் கடத்துவது. நான்கு இலக்குகள். வர்த்தக மையக் கட்டடங்கள் இரண்டுக்குத் தலா ஒரு விமானம். பெண்டகனுக்கு ஒன்று. இன்னொன்று எதற்கு என்று நாம் யூகத்தில் சொல்லக் கூடாது. உண்மையில் கடத்தப்பட்ட அந்த நான்காவது விமானம் எதன்மீதும் மோதுவதற்கு முன்னால், தரையில் விழுந்து வெடித்துச் சிதறிவிட்டதால், அல் காயிதாவின் திட்டம் என்னவென்பது குறித்த உண்மை தெரியாது. அமெரிக்க அரசின் கணிப்புப்படி, அது வெள்ளை மாளிகை. ஒசாமா வேறு ஏதாவது கருப்பு மாளிகையைக் கூடத் தீர்மானித்திருக்கலாம். ஆதாரமில்லாமல் நாமும் அதையே சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது.

ஆக, திட்டம் இதுதான். இதைச் செயல்படுத்த வேண்டும். அதற்கு என்னென்ன வேண்டும்?

முதலில் சரியான ஆட்கள் வேண்டும்.

பணம் வேண்டும்.

பிரச்னையில்லாத தகவல் தொடர்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

ரகசியம் காப்பாற்றப்பட வேண்டும்.

1991-ம் ஆண்டு மே மாதம் தொடங்கி, அந்த வருடம் முழுவதும் கந்தஹார் நகருக்கு வெளியே அல் மடர் (Al Matar) என்கிற இடத்தில் தங்கி ஒசாமாவும் காலீத் ஷேக்கும் ஜவாஹிரியும் முஹம்மது அடீஃப்பும் இது குறித்து விவாதித்திருக்கிறார்கள் என்று பின்னர் வெளியான 9/11 விசாரணை கமிஷன் அறிக்கை சொல்கிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பங்கு பெற்றவர்களுள் கைதானவர்கள் எத்தனை பேர் என்று இன்றுவரை துல்லியமாக யாருக்கும் தெரியாது. அமெரிக்க அரசு பத்துப்பேரின் பெயர்களை மட்டுமே வெளியிட்டிருக்கிறது. அந்தப் பத்துப்பேர் திருவாய் மலர்ந்ததிலிருந்துதான் இந்த விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஆச்சா? முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளை முடித்தபிறகு, யார் யாரைத் தாக்குதல் திட்டத்தில் ஈடுபடுத்தலாம் என்று அடுத்த கட்டத்துக்கு முன்னேறினார்கள்.

ஒசாமா பின்லேடன் தன் சுய விருப்பத்தின் அடிப்படையில், முதல் முதலில் நான்கு போராளிகளைத் தேர்ந்தெடுத்து, தற்கொலைத் தாக்குதலுக்குத் தகுதியான ஆட்கள் என்று அறிவித்தார். அவர்கள், காலித் அல் மிஹ்தர், நவாஃப் அல் ஹஜ்மி, கல்லத், அபு பாரா அல் ஏமனி ஆகியோர்.

இந்த நான்கு பேரில் இருவருக்கு (மிஹ்தர், ஹஜ்மி) ஏற்கெனவே அமெரிக்க விசா இருந்தது. அது ஒரு கூடுதல் தகுதியாகக் கருதப்பட்டது. சவூதி அரேபியர்களான இந்த இரண்டு பேருக்கும் ரொம்ப நாட்களாகவே ஒரு

கனவு இருந்தது. குறிப்பாக, கென்ய தூதரகம் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட பிறகு, அந்த மாதிரி ஒரு 'செயற்கரிய' செயல் செய்யும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்காதா என்று அடிக்கடி ஒசாமாவிடம் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார்கள். நைரோபி தூதரகத் தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைப் படைப் போராளியின் சகோதரன் ஒருத்தன், இவர்கள் இரண்டு பேருக்கும் நண்பனாக இருந்ததுதான் இதற்குக் காரணம். தமது அண்ணனின் வீரதீர பராக்கிரமக் கதைகளைச் சொல்லி ஒருவழி பண்ணியிருப்பான் போலிருக்கிறது.

மேற்படி திட்டத்தில் அவர்கள் இருவரையும் இணைத்துக்கொள்ளலாம் என்று ஒசாமா தெரிவித்தபோது, அவர்கள் போஸ்னியாவில் இருந்தார்கள். அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்த உள்நாட்டு யுத்தத்தில், முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதற்காக, 1995-ம் ஆண்டு ஒசாமா அனுப்பிய அல் காயிதாவின் ஒரு சிறு குழுவில் இடம்பெற்று, அங்கே சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

செப்டெம்பர் 11 திட்டம் தயாரானதும் ஒசாமாவே நேரடியாகத் தகவல் சொல்லி அனுப்பி, அவர்கள் இருவரையும் ஆப்கனிஸ்தானுக்குப் பயிற்சிக்கு வரவழைத்தார்.

இத்திட்டத்தில் பங்குபெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்னொரு அல்காயிதா தீவிரவாதியான கல்லத், பரம்பரையாகவே தீவிரவாத மனோபாவம் மேலோங்கிய குடும்பத்திலிருந்து வந்தவன். அவனது குடும்பத்தில் பலபேர் பல போராளிக் குழுக்களில் பங்குபெற்றவர்கள். ஏமனில் அவனது தந்தையை, அவரது தீவிரவாத நடவடிக்கைகளுக்காக அரசு, நாடு கடத்தியிருக்கிறது. தந்தை நாடு கடத்தப்பட்டதால் கல்லத், குடும்பத்தினருடன் சவூதி அரேபியாவுக்கு வந்து வசிக்க வேண்டியிருந்தது. அங்கேதான் அவனுக்கு ஒசாமா பின்லேடன், அப்துல்லா அஸம், ஓமர் அப்துல் ரஹ்மான் போன்றோரின் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

தனது பதினைந்தாவது வயதில் கல்லத் ஆப்கனுக்குப் பயிற்சிக்காகச் சென்றான். வடக்குக் கூட்டணிப்படையினருக்கு எதிரான ஒரு யுத்தத்தில், அங்கே அவனது வலதுகாலின் கீழ்ப்பகுதி சேதமுற்றது. அதே யுத்தத்தில் அவனது சகோதரன் ஒருவனும் செத்துப் போனான். அதன்பிறகுதான் சிறு வயதில் ஜெட்டாவில் தான் சந்தித்திருந்த ஒசாமா பின்லேடனை மீண்டும் சந்தித்து, அல் காயிதாவில் தன்னை இணைத்துக்கொண்டான். காலில் ஊனம் இருந்தாலும், தன்னால் ஒரு தற்கொலைப் படைப் போராளியாக எப்போதும் செயல்படமுடியும்; அதற்கு, தான் இப்போதே தயார் என்று சொல்லித்தான் கல்லத், அல் காயிதாவில் இணைந்தான். அதாவது, ஆடாக நுழைந்து பலியாடாகாமல், பலியாடாகவே பதவி ஏற்றுக்கொண்ட பிரகஸ்பதி.

முன்னதாக 1998-ம் ஆண்டே கல்லத் ஒரு சமயம் அமெரிக்க விசாவுக்கு மனு செய்திருந்தான். என்ன காரணத்தாலோ, அவனுக்கு விசா கிடைக்கவில்லை. ஒசாமா அவனை முதலில் சவூதியிலிருந்து கிளம்பி, ஏமனுக்குப் போகச் சொன்னார். அங்கே திட்டமிட்டிருந்த யு.எஸ்.எஸ். கோல் அமெரிக்கப் போர்க்கப்பல் தாக்குதல் திட்டத்துக்கு, என்னவாவது ஒத்தாசை பண்ணிக்கொண்டே ஏமன் குடிமகன் மாதிரி அமெரிக்க விசாவுக்கு அப்ளை செய்யச் சொல்லி ஐடியா கொடுத்தார்.

சொன்னபடியே கல்லத் ஏமனுக்குப் போய் விசா ஆபீஸர்களுக்கு ஓர் உத்தமமான கடுதாசி எழுதினான். 'ஐயா பெரிய மனுஷங்களே, இந்தமாதிரி, நான் ஒரு கால் ஊனமுற்ற உத்தம முஸ்லிம். என் காலில் ஆபரேஷன் பண்ணுவதற்காகத்தான் அமெரிக்கா போகிறேன். வேறு எந்த தப்புத்தண்டாவுக்கும் நான் ஜவாப்தாரி இல்லை; வேணுமானால் அங்கே எனக்கு ஆபரேஷன் செய்யவிருக்கும் டாக்டர் எழுதிய ஆதாரக் கடுதாசியையே உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். எப்படியாவது எனக்கு விசா கொடுத்து என் காலைக் கடைத்தேற்றுங்கள்' என்று முடிந்தது அக்கடிதம்.

ஆனால் துரதிருஷ்டவசமாக, அவனுக்கு அமெரிக்காவிலிருந்து வரவிருந்த அந்தக் கடிதம் வந்து சேர்வதற்கு முன்னால், ஒரு பெரிய அசம்பாவிதம் நடந்துவிட்டது.

ஏமன் துறைமுக சம்பவம் தொடர்பாக, ஏமன் காவல்துறையினர் மிகத்தீவிரமாகத் தேடுதல் வேட்டை நடத்திக்கொண்டிருந்த சமயம் அது. அப்படி அவர்கள் ஒரு குறிப்பிட்ட தீவிரவாதியைக் குறிவைத்துத் தேடிக்கொண்டிருந்தபோது, தற்செயலாக ஒருநாள் கல்லத் அவனது காரில் பயணம் செய்ய நேர, தவறாக அடையாளம் கண்டு கைது செய்யப்பட்டுவிட்டான்.

இங்கே கொஞ்சம் கவனிக்க வேண்டும். கல்லத் நேரடியாக யு.எஸ்.எஸ். கோல் சம்பவத்துடன் சம்பந்தப்படவேயில்லை. அச்சம்பவத்தில் பங்குபெற்ற இன்னொரு தீவிரவாதியின் காரில் பயணம் செய்ததுதான் அவன் செய்த ஒரே தவறு. இதனாலேயே ஏமன் காவல்துறை அவனைக் கைது செய்தது. அதாவது, தாம் தேடிக்கொண்டிருக்கும் தீவிரவாதி அவன்தான் என்று நினைத்து கல்லத்தைக் கைது செய்துவிட்டார்கள்.

இது ஒசாமா பின்லேடனுக்கு மிகப்பெரிய பிரச்னையாகிவிட்டது. காவல்துறையின் பிடியில் சிக்கியிருந்த கல்லத்,

விசாரணையில் கப்பல் தகர்ப்பு வழக்கு குறித்து ஏதாவது உளறிவிட்டால், பெரிய ஆபத்தாகிவிடுமே என்று அஞ்சிய ஒசாமா, தனக்குத் தெரிந்த ஏமன் அரசு உயர் அதிகாரி ஒருவர் மூலம் கல்லத் விடுதலை செய்யப்படுவதற்குத் தன் சக்திக்கு மீறி நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். எந்தப் பிரச்னையும் இல்லாமல் அவன் விடுதலை செய்யப்பட்டால், தன்னால் ஏமனுக்கு எப்போதும் எந்தப் பிரச்னையும் வராது என்றும் உத்தரவாதம் அளித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இம்மாதிரியான முயற்சிகளால் 1999-ம் ஆண்டு மத்தியில் கல்லத் விடுதலை செய்யப்பட்டான். ஆனாலும் இவ்விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே பரவத்தொடங்கி, அல் காயிதாவுடன் கல்லத் கொண்டிருந்த தொடர்பு வெளிவர ஆரம்பித்துவிட்டது. அமெரிக்க அரசுக்கும் இவ்விஷயம் ஒருவேளை அப்போதே தெரிந்திருக்கக் கூடும். அதனால்தானோ என்னவோ, அவனுக்கு அமெரிக்க விசா இம்முறையும் மறுக்கப்பட்டுவிட்டது.

வேறு யாரைப் போடலாம் என்று நகத்தைக் கடித்துக்கொண்டு யோசிக்க ஆரம்பித்தார்கள்.